# போர்த்துக்கேயர் ஆட்சியின் இறுதிக்காலம்

36

அத்தப் பத்து முதலியாரின் தலைமையில் வந்த சிங்களப் படையினர் முதலில் பச்சிலைப் பள்ளியில் இருந்த கிருத்தவத் தேவாலயத்தை அழித்து அந்தத் தேவாலயக் குருவையும் வெட்டிக் கொன்றனர்.

அதன் பின் செல்லும் வழியில் இருந்த ஏனைய கிருத்தவக் கோயில்களையும் அழித்தவாறு யாழ்ப்பாணத்தை அடைந்தனர். அங்கும் யாழ்ப்பாண நகரத்தைச் சுற்றியிருந்த பல கோயில்களை தீக்கிரையிட்டனர். அப்போது யாழ்ப்பாணத்திலிருந்த போர்த்துக்கேயப் படைகளின் எண்ணிக்கையை விட சிங்களப் படைகளின் எண்ணிக்கை அதிகமாக இருந்ததாலும் யாழ்ப்பாணப் பிரதானிகளுக்குள்ளேயே அவர்களுக்கு எதிர்ப்பு இருந்ததாலும் போர்த்துக் கேயர்கள் வெளியில் வந்த சிங்களப்படைகளுடன் நேருக்கு நேர் சண்டை செய்யாமல் கோட்டைக்குள் பதுங்கிக் கொண்டு அவர்கள் மீது பீரங்கித் தாக்குதலை நடத்தினார்கள்.

சிங்களப்படையினர் தொடர்ந்து 13 நாட்களாக யாழ்ப்பாணக் கோட்டையை முற்றுகையிட்டு தாக்குதல் நடத்தினர். இதற்கிடையில் கண்டியிலிருந்து சிங்களப்படை யாழ்ப்பாணம் சென்ற செய்தியறிந்து போர்த்துக்கேயரின் கொழும்புத் தேசாதிபதி, அங்கிருந்து 7000 சிங்களவர்களைக் கொண்ட லாஸ் கொறீன்சும் என்ற படைப்பிரிவையும் தொமிங்கு கார்வலோ (Domingos Corvallo) என்பவனின் தலைமையிலான 700 போர்த்துக்கேயர்களைக் கொண்ட படையையும் யாழ்ப்பாணத்துக்கு அனுப்பிவைத்தான். அந்தப்படையினர் யாழ்ப்பாணத்துக்கு வந்து சேர்ந்ததும் கோட்டையை முற்றுகையிட்டிருந்த கண்டிய சிங்களப் படையை சுற்றிவளைத்தனர். கோட்டைக்குள்ளிருந்தும், கோட்டைக்கு வெளியிலிருந்தும் போர்த்துக்கேயப் படைகள் தாக்குதல் தொடுத்ததால் கண்டிய சிங்களப்படை நிலைகுலைந்தது. இறுதியில் அந்தப் படைக்கு தலைமை தாங்கிவந்த அத்தப்பத்து முதலியார் உட்பட அனைவரும் கைது செய்யப் பட்டனர்.

இவ்வாறு கைது செய்யப் பட்டவர்களில் அத்தப்பத்து முதலியாருக்கும் அவரது படைத் தலைவர்களுக்கும் மரணதண்டனை நிறைவேற்றப்பட்டது. ஏனையோர் அடிமைகளாக விலைபேசி விற்கப்பட்டனர்.

இந்தச் சண்டை முடிவடைந்தபின் அதாவது கி.பி 1629-ல் இருந்து ஒல்லாந்தர் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றிய கி.பி 1658 வரை குறிப்பிட்டுச் சொல்லும்படியாக போர்த்துக்கேயருக்கு எதிரான பெரிய யுத்தம் எதுவும் நடைபெறவில்லை.

கி.பி 1623-ல் அதாவது ஒலிவேரா உயிரோடு இருந்த காலத்தில் யாழ்ப்பாணத்திலுள்ள காணிகள் பற்றிய விபரம் அடங்கிய காணித் தோம்பு முதன் முதலாக ஏழுதப்பட்டது. பனை ஓலை ஏட்டில் எழுதப் பட்ட இத் தோம்பு அந்தத் தொழிலை மேற்கொண்ட அலுவலரின் கவனக்குறைவாலும்; அனுபவக் குறைவாலும் பூரணமானதாக இருக்கவில்லை.

இதனால் கி.பி 1645ல் மீண்டும் திருத்திய தோம்பு ஒன்று எழுதப்பட்டது. இத் தோம்பில் ஊர் ஊராகப் பிரித்து யாழ்ப் பாணக்குடாநாட்டில் உள்ள காணிகளின் விபரமும் அவற்றின் உரிமையாளரின் விபரமும் அவற்றின் பரப்பளவும் அரசுக்கு வரவேண்டிய வரிகளும் குறிப் பிடப்பட்டதோடு, அக் காலத்தில் யாழ்ப்பாணக் குடாநாட்டில் இருந்த சாதிகளும், அச் சாதிகள் அரச பிரதானிகளுக்கும், தங்களுக்கு மேலுள்ள சாதிகளுக்கும் செய்ய வேண்டிய கடமைகளும், செலுத்த வேண்டிய வரிகளும் பற்றிய விபரங்களும் விரிவாக எழுதப்பட்டன.




தமிழரசர் காலத்தில் இருந்த தேசவழமை சட்டப்படியே போர்த்துக்கேயரும், நீதி செலுத்தி வந்தார்கள். தமிழரசர் காலத்தில் பெற்றோரின் சொத்துக்கள் ஆண் பிள்ளைகளுக்கே சேரும். பெண்களுக்கு சீதனம் மாத்திரமே உண்டு. தகப்பன் உயிருடன் இருந்து, வீட்டில் உள்ள பொருட்களில் பங்கு பிரித்தால் பங்கு கிடைக்கும். அசைவற்ற பொருட்களில் பங்கில்லை. தாய்க்குப்பின் தாய் வழிப் பொருட்களில் பங்குண்டு. பெற்றோருக்கு ஆண் பிள்ளைகள் இல்லாவிட்டாலும், அவர்கள் யாரையும் தங்களது சுவீகார புத்திரர்களாக தத்து எடுக்காவிட்டாலும், அவர்களது சொத்துக்கள் ஆண்வழி சகோதரர்களுக்கே சேரும். சுவீகாரம் செய்வதானாலும் அந்நியர்களின் பிள்ளைகளை சுவீகாரம் செய்ய முடியாது. சகோதரன் அல்லது சகோதரியின் பிள்ளைகளையே சுவீகாரம் செய்யலாம். சகோதரி பிள்ளையை சுவீகாரம் செய்வதானால், சகோதரர்களது அனுமதி பெறப் பட வேண்டும். உரிமைக்காரன் இல்லாது ஒருவர் இறந்தால் அவரது சொத்துக்கள் அரசுக்குரியதாகிவிடும். இறந்தவருக்கு ஆண் சகோதரர்கள் இருந்தால் அவர்கள் இறந்தவரது சொத்தின் பெறுமதிக்கு ஏற்ப வரி செலுத்தி அதை தமதாக்கிக் கொள்ளலாம். அப்படி அவர்கள் அந்தச் சொத்தை ஏற்காத பட்சத்தில் இறந்தவரின் உறவுக் காரர்கள் அச் சொத்தின் பெறுமதியின் அரைவிலையைச் செலுத்தினால் அவை அவர்களுக்கு எழுதிக் கொடுக்கப்படும்.

போர்த்துக் கேயர்கள், தீவிரமான சமயவெறி கொண்டவர்களாகவும், தங்களது சமயத்தைப் பரப்புவதற்காக மற்ற சமயங்களையும், அவற்றைக் காப்பாற்றிவந்த அரசுகளையும் தயவு தாட்சணியமின்றி அழித்தொழிப்பதில் அதிக அக்கறை காட்டியதால் பின்னால்வந்த காலனிய ஆட்சியாளர்கள்போல் பொருளீட்டுவதில் மட்டும் குறியாக இருக்கவில்லை. பெரும்பாலும் அவர்கள் இலங்கையிலும், இந்தியாவிலும் பெற்றுக் கொண்ட செல்வத்தின் பெரும்பகுதியை அங்கிருந்த சுதேச மன்னர்களுக்கு எதிரான யுத்தங்களுக்கே செலவு செய்தனர். இதனால் அக் காலத்தில் உலகைப் பங்கு போடுவதற்கு கடலில் ஆதிக்கம் செலுத்திவந்த பிரெஞ்சு, ஸ்பானிய, ஒல்லாந்து அரசுகளின் கடற்படைகளோடு அவர்களால் போட்டிபோட முடியவில்லை. தெற்காசியாவைப் பொறுத்தவரை அக் காலத்தில் பிரெஞ்சுக்காரரும் ஒல்லாந்தருமே அதிகளவு அக்கறை கொண்டவர்களாக இருந்தார்கள். ஆங்கிலேயர்கள் அப்போது அங்கே பெரிய அளவுக்கு தலைகாட்டவில்லை.

போர்த்துக்
கேயர்கள், தீவிர சமயவெறி
கொண்டவர்களாகவும்,
தங்களது சமயத்தைப்
பரப்புவதற்காக மற்ற
சமயங்களையும், அவற்றைக்
காப்பாற்றிவந்த அரசுகளையும்
தயவு தாட்சணியமின்றி
அழித்தொழிப்பதில் அதிக
அக்கறை காட்டியதால்
பின்னால்வந்த காலனிய
ஆட்சியாளர்கள்போல்
பொருளீட்டுவதில் மட்டும்
குறியாக
இருக்கவில்லை.

கி.பி 1595-ம் ஆண்டிலேயே ஒல்லாந்துக் கப்பல்கள் வியாபார நோக்கமாக இலங்கைக் கடற் பிராந்தியத்திற்கு வந்து போகத் தொடங்கின. கி.பி. 1602-ம் ஆண்டு மே மாதம் 30-ம் திகதி ஸ்பில்போர்க் (Spil Berg) என்னும் ஒல்லாந்துக் கப்பற்படைத் தலைவன் மட்டக்களப்பில் வந்து தரையிறங்கி, அங்கிருந்த வன்னியச் சிற்றரசனின் உதவியுடன் அப்போது கண்டி அரசனாக இருந்த விமலதர்மசூரியனைச் சந்தித்தான்.

ஒல்லாந்தரின் உதவியைப் பெற்று போர்த்துக்கேயரை இலங்கையிலிருந்து துரத்தலாம் என்று நினைத்த விமலதர்மசூரியன், அவனை வரவேற்று அவனுடன் வியாபாரம் செய்யவும், அவனது நாட்டவர்கள் விரும்பிய இடங்களில் கோட்டைகளைக் கட்டவும் ஒத்துக்கொண்டான். ஆனால் அதற்கு அடுத்த வருடம், விமலதர்மசூரியன் மட்டக்களப்பிற்கு விஜயம் செய்தபோது அப்போது அங்கிருந்த ஒல்லாந்துப் படைத் தலைவன் அவனுக்குரிய மரியாதையைச் செலுத்தாமல் அவரியாதையாக நடந்துகொண்டான். இதனால் கோபம் கொண்ட அவன், அந்தப் படைத்தலைவனை தலை வெட்டிக் கொன்றுவிட்டான். இச் 'சம்பவத்தின்பின் ஒல்லாந்தர் சிறிதுகாலம் இலங்கைக்கு வராது இருந்தனர்.

அதன்பின் கண்டியில் விமலதர்மசூரியனின் ஆட்சி முடிவுக்கு வந்து டோனா கத்தரீனா என்ற பெண் அரசியானதும், கி.பி 1609ம் ஆண்டு ஒல்லாந்த அரசன் பொஸ்கூவர் (Boscover) என்னும் படைத்தலைவனை அவளிடம் தூதாக அனுப்பினான்.

கத்தரீனாவின் சமூகத்திற்கு வந்த ஒல்லாந்துத் தூதுவன், தமது முன்னோர்கள் நடந்து கொண்ட விதத்திற்கு மன்னிப் புக்கேட்டதுடன், கண்டி அரசி தங்களுடன் மட்டுமே வர்த்தகம் செய்ய வேண்டும் என்றும், அதற்கு பிரதி உபகாரமாக போர்த்துக்கேயரை இலங்கையிலிருந்து துரத்த அவளுக்கு தமது அரசர் படை உதவி வழங்கத் தயாராக இருப்பதாகவும் தெரிவித்தான். அக் காலத்தில் போர்த்துக்கேயரால் கண்டி அரசுக்கு பெரும் நெருக்கடி இருந்து வந்ததால் கத்தரீனா ஒல்லாந்த அரசனின் வேண்டுகோளை ஏற்க முடிவு செய்தாள். அதே ஆண்டு போர்த்துக்கேயருக்கு விரோதமாக கண்டி அரசும், ஒல்லாந்து அரசும் ஒப்பந்தம் ஒன்றை செய்து கொண்டன. இந்த ஒப்பந்தத்தில் கண்டி அரசின் சார்பில் அரசி டோனா கத்தரீனாவும், அவளது கணவன் செனரத்தும் - ஒல்லாந்து அரசின் சார்பில் அரச தூதுவன் பொஸ்கூவரும் கையொப்பம் இட்டுக் கொண்டனர்.

- நக்கீரன்